# லண்டன் முரசு



தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

WHAT?

WHERE?

ANSWERS ON THIS PAGE

NEXT MONTH

# லண்டன் முரசு

தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை
— பாரதிதாசன்

முரசு 1 ஆனி திருவள்ளுவர் ஆண்டு 2001 யூன் 1970 ஒலி 3


| | |
|---|---|
| ஆசிரியருரை | 2 |
| தாய்நாடுகளின் செய்திகள் | 3 |
| மேற்கு நாடுகளின் செய்திகள் | 9 |
| தமிழக தொழிலமைச்சருடன் பேட்டி | 11 |
| சட்ட ஆய்வு வினா | 12 |
| அன்புள்ள ஆசிரியருக்கு | 13 |
| தமிழின் சிறப்பு | 15 |
| விஞ்ஞானப் பகுதி | 16 |
| லண்டன் வினோதம் பாரீர் | 17 |
| கேள்வி — பதில் | 17 |
| பேரறிஞர் அண்ணாவின் பெருஞ்சிறப்பு | 18 |
| மாதர் பகுதி | 19 |
| சட்ட ஆய்வு தீர்ப்பு | 20 |
| வேலை வாய்ப்புகள் | 20 |
| English Supplement | |
| World Tamil Conference | 21 |
| Tamil Through English | 21 |
| Vacancies | 22 |



கௌரவ ஆசிரியர் : ச.ம.சுதானந்தன்

கௌரவ உதவியாளர்கள்:
ந.சச்சிதானந்தன்
பொன்.பாலகோபால்
தம்பையா இராமநாதன்
இளவரசி ஆனந்தன்

கௌரவ நுண்கலை பொறுப்பாளர்கள்:
ச.காங்கேசன்
நாகலிங்கம் இராமநாதன்

மேற்கு நாடுகளின் முதன்முதல் தமிழ் திங்கள் ஏடு

இலாபநோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம்

PUBLISHED BY LONDON MURASU PIRASURAM (Regd)

8 ASHEN GROVE LONDON S W I9

# இலங்கைத் தமிழ்மக்கள் விருப்பம்

பந்தயம் ஓடி முடிந்தது. புழுதிகள் படிந்தன. வெற்றியீட்டிய குதிரைகள் வெற்றிக் கேடயங்களைப் பார்த்துக் குதூகலித்துக் கொண்டிருக்கின்றன. தோல்வியுற்ற குதிரைகள் உடைந்த லாடன்களையும் புழுதி படிந்த குரையையும் தடவிக்கொண்டிருக்கின்றன. இதுவே இலங்கையின் தேர்தற் பின் காட்சியாகும். 1960ம் ஆண்டில் உலகசரித்திரத்தில் முதற் பெண்மணிப் பிரதம ராக வந்தமையால் ஒரு மைல் கல்லை நாட்டிய சிறீமாவோ பண்டாரநாயக்கா சென்ற மாதம் இலங்கைப் பொதுத் தேர்தலில் கூட்டுமுன்னணியின் தலைமையேற்று அமோக வெற்றியுடன் மீண்டும் பிரதமராக வந்துள்ளார். இந்த வியக்கக் கூடிய வெற்றியீட்டிய புதிய பிரதமரையும் அவர் குழுவினரையும் லண்டன் முரசு வாழ்த்திப் பாராட்டுகிறது.

மிக அதிகப்படியான இடங்களைப் பெற்ற புதிய அரசாங்கத்திற்கு மிகுந்த செல் வாக்கு மட்டுமன்றி பொறுப்பும் இருக்கவேண்டும் என்பதைக் கூறவேண்டியதில்லை. போதிய பல முள்ள எதிர்க் கட்சி இல்லாத காரணத்தினால் அவர்கள் சொல்லிலும், செயலிலும், சேவையிலும் மிகக் கவனமும் நிதானமும் இருக்க வேண்டும்; முக்கியமாக இலங்கையின் சிறுபான்மை மக்களின் தன்மான வாழ்வுக்கும் பொது நலனுக்கும் போதிய உத்தரவாதம் தருவது அரசாங்கத்தின் கடமையாகும்.

இலங்கைவாழ் தமிழ் மக்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படையான உரிமை களே கிடைக்காது படிப்படியாக இரண்டாந்தர, மூன்றாந்தரப் பிரஜைகளாக்கப் படுவதை சாத்வீக முறையில் எதிர்த்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இதுவரை ஒரு பலமுள்ள அரசாங்கம் இல்லாத காரணத்தினால் இவ் உரிமை வேண்டுகோள்கள் சிங்கள எதிர்க்கட்சிகளின் அரசியற் கோஷங்களுக்கு பொருளாகி புறக்கணிக்கப்பட்டுவிட்டன.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எக்கட்சிக்குச் சேர்ந்தவராயினும் தமிழரின் மொழி யுரிமை, கல்வி, தொழில் முன்னேற்றம் முதலியவற்றைப் பொறுத்தவரையில் இவர்களுக்கிடையியே அபிப்பிராயபேதம் யாதுமிராது. அத்தியாவசிய உரிமைகளுக்காக ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழத்தெரியாத ஒரு மடமை எமது தலைவர்களிடம் இதுகாறும் இருந்தது; இம் மனப்பான்மையை இனி விட்டுவிடுவார்களெனப் பிரார்த்திக்கிறோம். தமிழ்மக்கள் தமது தன்மான உரிமைகளை ஒற்று மையாகப் பெற்று சிங்கள மக்களுடன் முழுமையான இலங்கையில் வாழும் பூரணத்துவத்தைத் தான் விரும்புவார்கள். இக்குறிக்கோள்களை அறிந்து இரு இன மக்களின் வேண்டுகோளை மதித்து, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் நியாயமான வழிமுறைகளையும் தலைவர்கள் கடைப் பிடிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் சமரச நிலையில் பெறக்கூடிய, பெறவேண்டிய, பெரும்பான்மை மக்களால் ஒத்துக்கொள்ளக்கூடிய சில உரிமைகளைக் கூறுவதில் லண்டன் முரசு திருப்தியடைகிறது. அவையாவன:

1. சிங்கள மொழியை அரசாங்க மொழியாக ஏற்கும் நிலையில் தமிழை ஒரு உத்தியோக பூர்வமான தேசிய மொழியாக்குதல்.
2. இலங்கை வாழ் தமிழ் மக்களின் கல்வி மொழி தமிழாக்கப்பட்டு சிங்களத்தைத் தமிழரின் இரண்டாம் மொழியாக ஏற்றுக்கொள்ளுதல்.
3. தமிழ்க் கலாச்சாரத்தை வளர்க்க, தமிழ் சர்வகலாசாலையொன்றை அளித்தல்.

நாட்டு வாழ்வில் முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதும் ஜனநாயக சோஷலிச பாதை யில் நாட்டை ஆளும் குறிக்கோளைக் கையாள விரும்புவதுமாகிய இவ்வரசாங்கம் மக்கள் ஒரு சாராரின் கலாச்சாரத்தோடும் இலட்சியத்தோடும் ஊறிப்போன உரிமைகளை வழங்கி, ஒற்றுமை யை நிலைநாட்டி, நாடுகெட்டுப்பாடு குலையாது முன்னேறுவதற்கு வழிவகுக்குமென நம்புகிறோம்.

# தாய்நாடுகளின் செய்திகள்

## இலங்கையின் புதிய மந்திரி சபை

| | | |
|---|---|---|
| 1. | பிரதம மந்திரி, மற்றும் பாதுகாப்பு, வெளிவிவகார, திட்ட, வேலைப்பகுதி மந்திரி. | கனம் சிறீமாவோ பண்டாரநாயக்கா, பா.உ. |
| 2. | நிதி மந்திரி. | கனம் டாக். என். எம். பெரேரா, பா.உ. |
| 3. | பொது நிர்வாக, உள்நாட்டு விவகார, உள்ளூராட்சி மந்திரி. | கனம் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, பா.உ. |
| 4. | நீர்ப்பாசன, மின்சார, பெருஞ்சாலைகள் மந்திரி. | கனம் மைத்திரிபால சேனநாயக்கா, பா.உ. |
| 5. | உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகமந்திரி. | கனம் ரி. பி. இலங்கரத்ன, பா.உ. |
| 6. | தபால், தொலைப்போக்குவரத்துமந்திரி. | கனம் செல்லையா குமாரசூரியர். |
| 7. | கல்வி மந்திரி. | கனம் பதியுதீன் மஹ்முத். |
| 8. | கப்பற் பகுதி, சுற்றுலா மந்திரி. | கனம் பீ. பி. கலுகல்ல, பா.உ. |
| 9. | தொழில் மந்திரி. | கனம் எம். பீ. டி சொய்சா சிரிவர்த்தன, பா.உ. |
| 10. | கைத்தொழில், விஞ்ஞானவிவகார மந்திரி. | கனம் ரி. பி. சுபசிங்கா, பா.உ. |
| 11. | போக்குவரத்து மந்திரி. | கனம் லெஸ்லி குணவர்த்தன, பா.உ. |
| 12. | தோட்டக் கைத்தொழில் மந்திரி. | கனம் டாக். கொல்வின் ஆர். டி. சில்வா, பா.உ. |
| 13. | நீதி மந்திரி. | கனம் ஜே. மரியா ஜெயமனே. |
| 14. | கமத்தொழில், காணி மந்திரி. | கனம் ஏச். எஸ். ஆர். பி. கோபெக்கடுவெ, பா.உ. |
| 15. | மீன் பிடி மந்திரி. | கனம் ஜோர்ஜ் ராஜபக்ஸ, பா.உ. |
| 16. | வீடு, கட்டிட அமைப்பு மந்திரி. | கனம் பீற்றர் கெனமன், பா.உ. |
| 17. | சுகாதார மந்திரி. | கனம் டபிள்யூ. பி. ஆரியதாச, பா.உ. |
| 18. | தகவல், வானொலி மந்திரி. | கனம் ஆர். எஸ். பெரேரா, பா.உ. |
| 19. | சமூக சேவை மந்திரி. | கனம் ரி. பி. தென்னக்கோன், பா.உ. |
| 20. | கலாச்சாரப் பகுதி மந்திரி. | கனம் எஸ். எஸ். குலதிலகா. |
| 21. | பாராளுமன்ற விவகார மந்திரி. | கனம் கே. பி. ரத்நாயக்க, பா.உ. |

---

## இலங்கை சிம்மாசனப் பிரசங்கம்

இலங்கைச்சிம்மாசனப் பிரசங்கம் மூலம் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா உரைத்துள்ள கொள்கைகள்வருமாறு:

1 ஐந்து பிரித்தானிய வங்கிகள் உட்பட எட்டு அந்நிய வங்கிகளைத் தேசியமயமாக்குதல்.
2 அத்தியாவசிய பொருட்களை அரசாங்கம் இறக்குமதி செய்தல் மற்றும் தேயிலை, றப்பர், தெங்குத் தோட்டங்களை முகாமை கொண்ட பிரித்தானிய நிறுவனங்கள் தேசியமயமாக்கல்.
3 இலங்கை ஒரு சோஷலிச குடியரசு ஆகுதல்.
4 வட கொரியா, வட வியட்நாம், தென் வியட்நாம் தற்காலிக அரசு, கி. ஜேர்மனி நாடுகளுடன் நட்புறவு கொள்ளுதல்.

---

## புதிய தமிழ் மந்திரி திரு. செல்லையா குமாரசூரியர்.

கொழும்பு யூன் 4

அண்மையில் உருவாக்கப்பட்ட மந்திரிசபையில் தபால் தொலைப்போக்குவரத்து மந்திரியாகச் சேர்க்கப்பட்ட கௌரவ செல்லையா குமாரசூரியர் அவர்கள் மலேசியாவில் பிறந்து வளர்ந்து, யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் பயின்று, கடைசியில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான விசேட ப் பட்டம் பெற்றவராவார். இங்கிலாந்து சென்று ஏ.எம்.ஐ.சி.ஈ., பீ.ஐ.ஸி. என்னும் பொறியியல் பட்டங்களைப் பெற்றுத் திரும்பி சுகாதார இலாக்காவில் பொறியியலாளர் பதவியை வகுத்தார். அதன்பின் கட்டட அமைப்பு வேலைகளுக்குப் பொறுப்பாளராயிருந்தார். அப்பதவியை விட்டு நீங்கிய பிறகு ஒரு கட்டட ஆலோசகராகக் கடமையாற்றிக் கணேசன்–குமாரசூரியர் என்னும் கட்டடக் கலைத்தாபனத்தைத் தோற்றி, சுதந்திரக் கட்சியின் அரசியற் துறை ஆலோசகராகவும் கடமையாற்றினர். அத்துடன் சோஷலிச ஆராய்ச்சி வட்டத்தின் செயலாளராகக் கடமையாற்றிய, 42 வயது உடைய இவர் யாழ்ப்பாணம் மூளாயைச் சேர்ந்தவராவார்.

---

## சிறுபான்மைத் தமிழருக்கு நல்வாழ்வு

கொழும்பு யூன் 5

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பி வந்த அரசாங்க நியமன நாடாளுமன்ற உறுப்பினராகிய திரு.எம்.சி.சுப்பிரமணியத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்புரையில் தமிழரும் சிங்களவரும் இந்நாட்டில் ஒற்றுமையாக வாழும் தினம் எட்டிவிட்டதென்றும் 5லட்சம் சிறுபான்மைத் தமிழரின் விடிவுகாலம் நெருங்கி விட்டதென்றும் அவர் கூறினர். அடிமைப்பட்டு பல வருட காலமாக வாழ்ந்த இச்சமுகத்தை மீட்க முன்னணி அரசாங்கம் வந்துள்ளதென்றும் பின்னும் தொடர்ந்து கூறினர்.

---

## நிதி மந்திரி என்.எம்.கூறுகிறர்

முன்னுள் அரசாங்கத்தால் திறைசேரி கிட்டத்தட்டக் காலியான நிலையில் விடப்பட்டுள்ளதாகவும், நாட்டைச் சீரான நிலையில் அமைப்பதற்கு மக்கள் சிக்கனமாக வாழ வேண்டுமென்றும் புதிய நிதி அமைச்சர் டாக்.என்.எம். பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார். முன்னை நாள் அரசாங்கம் உண்மையான நிதி நிலையை வெளியிற் காட்டவில்லையென்றும் தற்சமயம் 10கோடி ரூபா தேவையெனவும் கூறினர்.

பத்திரிகைக் கவுன்சில் விடயமாக நிருபர் மகாநாட்டில் கேட்டபொழுது பத்திரிகைக் கவுன்சில் வரக்கூடுமெனவும் அதைப்பற்றி இப்பொழுது திட்டவட்டமான யோசனை யாதுமில்லையென்றும், அப்படி வந்தாலும் என்ன தீங்குதான் விளையப்போகிறது எனவும் கூறினர். தொடர்ந்து எப்படியேனும் எப்பத்திரிகையையும் தாங்கள் கைப்பற்றப் போவதில்லையெனவும் கூறினர்.

---

## இலங்கைத் தமிழ் பகுதிகளில் மக்கள் முன்னணி இயக்கம்

தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மூலம் செய்வதற்காக ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் மக்கள் முன்னணி என்ற பெயரில் பொதுசன இயக்கம் ஆரம்பிக்கப்பட விருக்கின்றது. இவ்வியக்கத்தின் ஆரம்ப வேலைகளைத் தமிழ் பகுதிகளில் கூட்டுக்கட்சிகளின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி உற்றவர்கள் செய்து வருகின்றனர். உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், கல்லூரிப் பாடசாலை அதிபர்கள் பொதுசன நிறுவனங்களின் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்விமான்களும் இவ்வபிவிருத்திச் சபை அங்கத்தவர்களாக இடம் பெறுவர்.

---

## இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள்

### கட்சிகளின் நிலை

| கட்சி | போட்டியிட்ட தொகுதிகளின் எண்ணிக்கை | வெற்றிபெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை | 1965 தேர்தலின் நிலை |
|---|---|---|---|
| சிறீ லங்கா சுதந்திரக் கட்சி | 106 | 90 | 41 |
| லங்கா சம சமாஜக் கட்சி | 23 | 19 | 10 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 128 | 17 | 66 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 19 | 13 | 14 |
| கம்யூனிஸ்டுக் கட்சி | 9 | 6 | 4 |
| தமிழ் காங்கிரஸ் | 12 | 3 | 3 |
| சுயேட்சை | 85 | 2 | 6 |

### தமிழ்பேசும் பகுதிகளின் தேர்தல் முடிவு விபரங்கள் பின்வருமாறு

**ஊர்காவற்றுறை**

| | | |
|---|---|---|
| க.பொ.இரத்தினம் | இதக | 13 079 |
| பி.கதிரவேலு | சுயே | 5 013 |
| வி.நவரத்தினம் | சுயே | 4 758 |
| என்.ரி.சிவஞானம் | சுயே | 1 667 |

**வட்டுக்கோட்டை**

| | | |
|---|---|---|
| ஏ.தியாகராஜா | தகா | 14 359 |
| ஏ.அமிர்தலிங்கம் | இதக | 13 634 |

**காங்கேசன்துறை**

| | | |
|---|---|---|
| எஸ்.ஜே.வி.செல்வநாயகம் | இதக | 13 520 |
| வி.பொன்னம்பலம் | கக | 8 164 |
| சி.சுந்தரலிங்கம் | சுயே | 5 788 |
| ரி.திருநாவுக்கரசு | தகா | 3 051 |

**உடுவில்**

| | | |
|---|---|---|
| வி.தர்மலிங்கம் | இதக | 14 120 |
| என்.சிவநேசன் | தகா | 11 656 |
| வி.எஸ்.பொன்னம்பலம் | கக | 1 362 |
| வி. காராளசிங்கம் | லசசக | 1 264 |

**யாழ்ப்பாணம்**

| | | |
|---|---|---|
| சி.எக்ஸ்.மாட்டின் | இதக | 8 848 |
| ஏ.துரையப்பா | சுயே | 8 792 |
| ஜீ.ஜீ.பொன்னம்பலம் | தகா | 7 222 |

**நல்லூர்**

| | | |
|---|---|---|
| சி.அருளம்பலம் | தகா | 13 116 |
| ரக்.ஈ.எம்.வி நாகநாதன் | இதக | 12 508 |
| ஏ.இரத்தினம் | சுயே | 1 593 |
| வி.சச்சிதானந்தன் | லசசக | 484 |
| சி.தனபாலசிங்கம் | சுயே | 223 |
| எஸ்.சிறினிவாசன் | சுயே | 140 |

**கோப்பாய்**

| | | |
|---|---|---|
| எஸ்.கதிரவேற்பிள்ளை | இதக | 16 428 |
| ரி. குணரத்தினம் | தகா | 11 288 |
| எஸ்.கனகசுந்தரம் | சுயே | 983 |
| என்.துரைராஜா | லசக | 713 |

### உடுப்பிட்டி

| | | |
|---|---|---|
| கே.ஜெயக்கொடி | இதக | 12 918 |
| எம்.சிவசிதம்பரம் | தகா | 11 652 |
| பி.குமாரசாமி | கக | 1 149 |
| கே.பீர்ஊனர் | சுயே | 724 |
| ஆர்.தர்மரத்தினம் | லசசக | 712 |
| எஸ்.சுந்தரம் | சுயே | 591 |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| கே.துரைரத்தினம் | இதக | 9 217 |
| என்.நடராஜா | தகா | 8 902 |
| பி.கனகராசா | சுயே | 579 |
| ஏ.விசாகரத்தினம் | சுயே | 305 |

### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| வி.என்.நவரத்திதனம் | இதக | 15 473 |
| வி.குமாரசாமி | தகா | 12 921 |

### கிளிநொச்சி

| | | |
|---|---|---|
| வி.ஆனந்தசங்கரி | தகா | 9 049 |
| எம்.ஆலாலசுந்தரம் | இதக | 8 392 |
| ஏ.கே.ஜெரோம் | சுயே | 253 |
| ஏ.சிவசுந்தரம் | சுயே | 196 |
| கே.கனகரத்தினம் | லசசக | 139 |

### மன்னார்

| | | |
|---|---|---|
| வி.ஏ.அழகக்கோன் | இதக | 10 697 |
| ஏச்.ஏ.ராகிம் | ஐதேக | 10 628 |
| என்.எம்.ஏ.காதர் | லசுக | 513 |

### வவுனியா

| | | |
|---|---|---|
| எம்.செல்லத்தம்பு | இதக | 10 947 |
| ரி.சிவசிதம்பரம் | தகா | 10 674 |
| எஸ்.பத்மநாதன் | கக | 3 120 |
| கே.சுபசிங்கா | சுயே | 584 |
| ஏ.செனிவரத்னா | சுயே | 137 |

### திருக்கோணமலை

| | | |
|---|---|---|
| பி.நெமிநாதன் | இதக | 12 395 |
| ஏ.ஜெமாலுடீன் | லசுக | 8 346 |
| ஆர்.நவரத்தினராசா | ஐதேக | 5 703 |
| ஆர்.ஜீ.செனநாயக்கா | சிமபெ | 601 |

### மூதூர்

| | | |
|---|---|---|
| எல்.அப்துல் மஜீத் | லசுக | 22 727 |
| ஏ.தங்கத்துரை | இதக | 19 787 |
| ஏச்,எல்.லீலாரத்னா | சுயே | 18 698 |
| ஏச்.மொகமது அலி | ஐதேக | 15 018 |
| பி.ஜி.சிறிசேனா | சுயே | 253 |

### கல்குடா

| | | |
|---|---|---|
| கே.டபிள்யூ.தேவநாயகம் | ஐதேக | 11 205 |
| பி.மாணிக்கவாசகம் | இதக | 8 420 |
| எஷ்.சிவஞானம் | சுயே | 1 660 |
| எஸ். கபிரியல் | சுயே | 557 |
| ஏ.எம்.[illegible]..கபூர் | லசுக | 331 |

### மட்டக்களப்பு

| | | |
|---|---|---|
| சி.ராஜதுரை | இதக | 27 661 |
| பி.ஆர்.செல்வநாயகம் | சுயே | 23 082 |
| ஏ.ஏச்.எம்.மரைக்கார் | ஐதேக | 17 015 |
| சி.அப்துல் ரகுமான் | லசுக | 14 805 |
| எஸ்.ஜே.அரசரத்தினம் | சுயே | 624 |
| எவ்.சேவியர் | சுயே | 196 |

### அம்பாறை

| | | |
|---|---|---|
| செனரத் சோமரத்னா | லசுக | 18 570 |
| பி.டயரத்னா | ஐதேக | 14 194 |
| வை.எஷ்.மினெரிஸ் | சுயே | 414 |

### பட்டிருப்பு

| | | |
|---|---|---|
| எஸ்.தம்பிராஜா | ஐதேக | 13 370 |
| எஸ்.எம்.ராசமாணிக்கம் | இதக | 12 723 |

### கல்முனை

| | | |
|---|---|---|
| எம்.சி.அகமது | லசுக | 8 779 |
| ஏ.ஆர்.மன்சூர் | ஐதேக | 7 827 |
| ஏ.உமொலெப்பை | இதக | 4 980 |

### நிந்தாவூர்

| | | |
|---|---|---|
| எம்.எம்.முஸ்தாபா | ஐதேக | 13 481 |
| எம்.அப்துல் மஜீத் | சுயே | 13 406 |
| சி.ஐ.எஸ்.காசீம் | லசுக | 556 |

### பொத்துவில்

| | | |
|---|---|---|
| எம்.ஏ.அப்துல் மஜீத் | ஐதேக | 10 610 |
| என்.தருமலிங்கம் | சுயே | 9 335 |
| எம்.ஐ.அப்துல் ஜபார் | லசுக | 5 209 |

### புத்தளம்

| | | |
|---|---|---|
| அப்துல் அசன்குடுஸ் | லசுக | 10 995 |
| எம்.நைனா மரைக்கார் | ஐதேக | 10 892 |
| ரி.டி.ஆகஸ்தீன் | சுயே | 2 209 |
| சீ.சரவணமுத்து | சுயே | 131 |

— • —

## தமிழக முதல் மந்திரி வெளிநாடு பிரயாணம்

தமிழக முதன்மந்திரி மாண்புமிகு மு.கருணாநிதி அவர்கள் யூலை முதல்திகதியளவில் சென்னையை விட்டுக்கிளம்பி இருபதுநாள் வரை மேற்குநாடுகளில் தங்கியிருப்பாரென நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன. பிரிட்டிஷ் அரசாங்கம் அவரின் கண் சிகிச்சைக்காக இரு நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்க ஆவன செய்துள்ளார்களாம்.

முதன்மந்திரி லண்டனில் யூலை நடுப்பகுதியில் எட்டுநாட்கள் வரை கழிப்பாராம் அத்துடன் ரோமாபுரி, மேற்கு ஜேர்மனி, ஒல்லாந்து, சுவிற்சர்லாந்து முதலிய இடங்களுக்கும் செல்வார். கண் ஆஸ்பத்திரி சுப்பிரின்டண் டாக். ஜே. ஈ. ஏபிரகமும் முதலமைச்சரின் அந்தரங்க காரியதரிசி திரு. வைத்தியநாதனும் நிதி இலாக்கா காரியதரிசி திரு. எஸ். வெங்கட்ராமனும் அவருடன் செல்வார்கள்.

---

## பாரதநாடு இன்னும் பிரிக்கப்படும் நிலை

பம்பாயில் 500 இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டாரெனக்கூறி யமாற்—இஸ்லாமி என்னும் கட்சி டக்கா நகரில் கூட்டம் கூடி 1948ல் மவுண்ட்பாற்றல் பிரிவினையில் இந்தியாவுடன் விடப்பட்டுள்ள பகுதிகளான அஸ்ஸாம், மேற்கு வங்காளம், பஞ்சாப் ஆகிய பிரதேசங்களைப் பாக்கிஸ்தானுடன் சேர்க்குமாறு வற்புறுத்திக்கூறினர். அஸ்ஸாமின்றி பாகிஸ்தான் பூரணமற்றதென மௌலானா பாஷானி கூறியுள்ளார். இந்திய முஸ்லிம்களின் நிலை—யைக் கவனிப்பதற்கு ரபாற் மகாநாடு போன்ற ஒரு இஸ்லாமிய உச்சிமகாநாடு கூட்டுமாறு ஜனாதிபதி யகியா கான் வற்புறுத்தப்படுகிறாராம். இதற்கு இணங்க அவர் விரும்பினும் அரபு—இஸ்ரவேல் தகராறு இருக்கும் தருணத்தில் இது சாத்தியமாகாதென அவருக்குத் தெரியும். கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து இந்துக்கள் ஓரத்தப்பட்டபடியால் தான் இக்குழப்பங்கள் ஏற்பட்டதென இந்தியா பாகிஸ்தானுக்கு அறிக்கை விட்டுள்ளது.

---

## மலேசியாவில் மிகு சாதகமான அந்நிய செலவாணி நிலை

மலேசிய அரசாங்கத்தின் 1969ம் ஆண்டுக்கணக்கு ஏழு கோடி பவுன்களில் அந்நிய செலவாணி அதிகரிப்புக்காணப்பட்டுள்ளது. இது ஒன்பது வருடத்தில் மிகுந்த அதிகரிப்பாகும். சென்ற ஆண்டு முடிவில் மொத்த வெளிநாட்டு சேமிப்பு 34 கோடி பவுன் என நெகரா வங்கியின் —மத்திய வங்கி— அறிக்கை கூறுகின்றது.

நாட்டின் முலப்பொருட்களான ரப்பர், எண்ணெய், தகரம், மர வகை ஆகியவையின் விளைவின் அதிகரிப்பினாலும் உலகசந்தைகளில் இவையின் விலை அதிகரிப்பினாலுமே இந்த சாதக நிலை ஏற்பட்டதாம். தேசிய விளைவின் அதிகரிப்பு ஒன்பது வீதம் ஏறிவிட்டது.

---

## கம்போடிய சமாதானக்குழுவில் மலேசியா தேர்வு

இந்தோனிசியாவின் தலைநகரான ஜாகர்த்தாவில் கூடிய மாநாடொன்றில்

மலேசியா, ஜப்பான், இந்தோனிசிய நாடுகள் கம்போடியாவில் சமாதானம் நிலைநாட்டும் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## மலேசியா—கொழும்பு விமான சேவை

ஆனி மாதம் தொடக்கம் கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்கூடாக கோலா—லம்பூர் வரை வாரம் மும்முறை விமான சேவை ஆரம்பமாகுமென தெரியவருகின்றது.

---

## மொறீசியஸ் தீவில் இந்தியப்பிரதமர்

இந்தியாவிலிருந்து 2700 மைல் தூரத்திலுள்ள மொறீசியஸ் தீவிற்கு இந்தியப்பிரதம மந்திரி அண்மையில் விஜயம் செய்தார். இரண்டு வருடத்திற்கு முன்னர் சுதந்திரமடைந்த மொறீசியஸ் இன, பண்பாடு ரீதியில் இந்தியாவை ஒத்தது. 68 விகிதம் இந்தியரைக் கொண்ட இந்நாட்டில், 50 விகிதத்தினர் இந்துக்களும் 32 விகிதத்தினர் கிறியோல் மக்களும் உள்ளனர்.

---

## ஸ்டான்டர்ட் மோட்டார் தொழிற்சாலை தேசியமயம்

தமிழ்நாட்டின் ஒரேயொரு மோட்டார்வண்டித் தொழிற்சாலையான ஸ்டான்டர்ட் மோட்டார் தொழிற்சாலையை தமிழக அரசாங்கம் தேசியமயமாக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

சென்னையின் அருகிலுள்ள வண்டலூரில் அமைந்துள்ள இத்தொழிற்சாலையில் ஏற்பட்ட தொழிற்தகராறு மற்றும் நஷ்டங்கள், இவை காரணமாக மூடப்படும் நிலை ஏற்பட்டது. தமிழகத்தின் ஒரேயொரு மோட்டார் வண்டி நிறுவனமான இதைத் தொடர்ந்து நல்முறையில் இயங்கவைக்க, தமிழக அரசு இந்நிலையில் குறுக்கிட்டு, தேசியமயமாக்குதற் பொருட்டு ஆவன செய்து வருகின்றது.

---

## லண்டன் முரசில் தொடர்கதை ஆரம்பமாகும்

எதிர்வரும் ஆவணியிலிருந்து லண்டன் முரசில் தொடர்கதை ஒன்று வெளிவரவிருக்கின்றது என்பதை தெரிவிக்க விரும்புகின்றோம்.

தொடர்கதை பற்றிய விபரங்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

---

## டாக்டர் உ வே சாமிநாதையர் நூல்நிலைய நிதி உதவி

டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் பல வருடங்கள் பாடுபட்டுச் சேர்த்த விவரக்குறிப்புகளும் இன்னும் பல விலைமதிக்க முடியாத தமிழ்ச்செல்வங்களும் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையத்தில் மக்கி கையாளுவதற்குக் கடினமாய், அழிந்துபோகும் நிலையில் உள்ளன.

இவைகளெல்லாம் உலக ஆராய்வாளர்க்கு தமிழ்நாட்டின், தமிழ் மொழியின் பெருமையைப் பறை சாற்றுபவை. இவை அழிந்து போகாமற் காக்கும் பொருட்டு குளிர்சாதன அறைகள் ஏற்படுத்தி, பிரதிகளைப் பாதுகாத்து, பெயர்த்து எழுதிப் பிரசுரிக்க ஏற்பாடு செய்யும் பொருட்டு மேற்படி நூல்நிலைய ஆட்சிக்குழு நிதி திரட்டும் குழு ஒன்றை ஏற்படுத்திவருகின்றது. இக்குழுவின் இங்கிலாந்துப்பிரதிநிதி எயர் இந்தியா ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. என். எஸ். வாசன் ஆவார்.

நிதி உதவி செய்ய விரும்புவோர் தமக்கு காசோலை மூலமாக பணம் அனுப்பி வைக்கலாமென திரு. என். எஸ். வாசன் தெரிவித்துள்ளார். அவரது முகவரி:

Dr.U.V.Swaminathaiyar Library Fund,
Thiru.N.S.Vasan,
IO7 The Grove,
Isleworth, Middx.

---

## மேற்கு நாடுகளின் செய்திகள்

### லண்டன் தமிழ் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழு

லண்டன் தமிழ் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யூன் மாதம் 6ந் திகதி யன்று படிங்ரன், வெஸ்ட்போர்ண் பார்க் பப்டிஸ்ட் சேர்ச் மண்டபத்தில் நடைபெற்றது. அன்று சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

மலேயாவைச்சேர்ந்தவரும், பிரித்தானிய அரசாங்க சேவையில் உயர் பதவி வகிப்பவரும், லண்டன் தமிழ் சங்கத்தில் நீண்ட காலம் தொடர்பு கொண்டவருமான திரு. ஐ. குமாரவேலு அவர்கள் லண்டன் தமிழ் சங்கத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய நிர்வாகக் குழுவின் விபரம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| தலைவர்: | திரு. ஐ. குமாரவேலு | உப தலைவர்: | திரு. ஜி. ராஜா ராஸ் |
| செயலாளர்: | திரு. எம். கந்தசாமி | உப செயலாளர்: | திரு. எஸ். ராஜகோபால் |
| தனாதிகாரி: | திரு. ச. ம. சதானந்தன் | | |

நிர்வாகக் குழு அங்கத்தினர்: டாக். கே. ஆறுமுகம், டாக். செ. சிவஞானசுந்தரம், திருவாளர்கள். எல். மெய்யப்பன், கே. ஏ. சுப்பிரமணியம், எஸ். மகரசிங்கம், வை. முத்துக்குமாரசுவாமி, கே. ஞான சூரியம், என். சோமநாதன், கே. சிவகுருநாதபிள்ளை, என். தியாகராஜன், ஆர். ஏ. சாமுவேல்.

---

### தமிழக அமைச்சர் லண்டன் வருகை

தமிழக தொழில் அமைச்சர் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் பிரித்தானிய அரசின் அழைப்பில் யூன் 10ந் திகதி லண்டன் வந்தார். மூன்று நாட்கள் அரசின் விருந்தினராக தங்கியிருந்த அமைச்சர் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதோடு லண்டனில் முக்கிய இடங்களுக்கும் அழைத்துச்செல்லப்பட்டார். லண்டனிலுள்ள தமிழர்கள் சிலரால் அவருக்கு விருந்தொன்று அளிக்கப்பட்டது. லண்டன் முரசு பிரதிநிதிகள் சிலரும் லண்டன் தமிழ் சங்க செயலாளர், உப செயலாளர் ஆகியோர் விருந்தில் கலந்துகொண்டனர்.

லண்டன் முரசு பிரசுரத்தின் அலுவலகத்தை வந்து பார்வையிட்ட அமைச்சர் லண்டன் முரசிற்கு தந்தக்கத்தியொன்றையும், அமரர் அண்ணா நினைவு நூல் ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அமைச்சர் யூன் 12ந் திகதியன்று இங்கிருந்து மேற்கு ஜேர்மனி சென்றார்.

---

### ஐக்கிய இராய்ச்சியத்தின் பொதுத் தேர்தல்

யூன் 18ந் திகதி நடைபெறும் ஐக்கிய இராய்ச்சியத்தின் பொதுத் தேர்தல் முடிவுகள், முரசு வாசகர்கள் கையில் கிடைக்குமுன், வெளிவந்திருக்கும்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் கட்சிகளின் நிலை:

| | | | |
|---|---|---|---|
| தொழிற் கட்சி | 346 | பழமைதழுவும் கட்சி | 262 |
| மிதவாதக் கட்சி | 13 | ஏனையவை | 9 |

மொத்தம் 630.

பத்திரிக்கைகளின் வாக்காளர் கருத்தாராய்வின்படி தொழிற் கட்சி திரும்பவும் பதவிக்கு வரலாமென தெரிவித்துள்ளார்கள்.

---

## பிரித்தானிய சைவமாமன்ற ஆண்டுப்பொதுக்கூட்டம்

பிரித்தானிய சைவமாமன்றத்தின் 4வது ஆண்டுப்பொதுக்கூட்டம் மே மாதம் 22ந்-திகதியன்று விம்பிள்டன் லிட்டில் மண்டபத்தில் நடைபெற்றது. மாமன்றத்தின் புதிய நிர்வாகக்குழுவொன்று அன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

புதிய நிர்வாகக் குழுவின் விபரம் பின்வருமாறு:

தலைவர்: திரு. சோ. சபாபதிப்பிள்ளை
உப தலைவர்கள்: திரு. ஏ. டி. எஸ். இரத்தினசிங்கம், டாக். வீ. பி. நாராயண் ராவ்
திரு. ஏ. பேரின்பநாதன், திரு. ஏ. வைரவமூர்த்தி
செயலாளர்: திரு. ச. வேதநாராயணன் தனாதிகாரி: திரு. க. சிவகுருநாதபிள்ளை
உப செயலாளர்: திரு. வீ. பொன்னையா உபதனாதிகாரி: திரு. ம. நடராஜா
நிர்வாகக்குழு அங்கத்தினர்: திருமதி. லோ. கணேசலிங்கம், திருமதி. ச. ம. இராமநாதன்
திருவாளர்கள்: எஸ். கதிர்காமராஜா, ஏ. தங்கேஸ்வரன்,
என். வாமதேவன், ச. ம. சதானந்தன்.

---

## தமிழ் திரைப்படம்: விளையாட்டுப்பிள்ளை

விக்டோரியாவிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் தியேட்டரில் யூலை மாதம் 5ம் திகதியன்று மாலை 7.00 மணிக்கு ஈஸ்ட் வெஸ்ட் பிலிம் கிளப்பினரால் சிவாஜி, பத்மினி நடிக்கும் விளையாட்டுப்பிள்ளை வர்ணப்படம் திரையிடப்படுமென தெரியவருகின்றது.

---

## ஆனி உத்திரம் பூஜை

பிரித்தானிய சைவமாமன்றத்தின் ஆதரவில் யூலை மாதம் 11ம் திகதி சனியன்று மாலை 5.00 மணியளவில் 104 டோரா ரோட், விம்பிள்டனிலுள்ள திரு. இரத்தினசிங்கத்தின் இல்லத்தில் ஆனி உத்திரம் மற்றும் மாணிக்கவாசகர் குரு பூஜை நடத்தப்படுமென தெரியவருகின்றது.

---

## குழலினிது யாழினிது ......

சுரேஷ் சிவஞானம் — லண்டன் நியூ க்ரொசைச் சேர்ந்த திரு திருமதி சிவஞானம் தம்பதிகளுக்கு ஆண் குழந்தை சுரேஷ்.

---

## ***************** பீ.பீ.சி தமிழோசை நிகழ்ச்சிகள் *********************

லண்டனில் தமிழ் லெகசி என்னும் நூலொன்றிலிருந்து அந்நூலின் ஆசிரியர் திரு இ. வீ. சிங்கம் அவர்கள் பீ.பீ.சி தமிழோசை அதிகாரிகளுடன் நடாத்திய பேட்டியின் சாராம்சம்:

பீ.பீ.சி தமிழோசை நிகழ்ச்சிகள் வாரம் மும்முறை — ஞாயிறு, திங்கள், வியாழன் நாட்களில் — 10.30 க்கும் 11.30 க்கும் இடையில் ஒலிபரப்பாகின்றது.

இலண்டனிலுள்ள நேயர்கள் தமிழோசையை 25 மீட்டரில் —சிற்றலை— 4.45 மணிக்கும் 5.15 மணிக்கும் இடையில் கேட்கலாம்.

பீ.பீ.சி தமிழோசை நிகழ்ச்சியில் தமிழ் தெரியும் மக்கள் யாவரும் பங்கு பெறலாமென அதிகாரிகள் இப்பேட்டியில் கூறியுள்ளனர்.

பீ.பீ.சி தமிழோசையின் விலாசம்: Mr.D.J.Barlow or Mr.S.Shankaramurthi
THAMIZHOSAI, External Services.
Bush House, Strand,
London.W.C.2.

## ********* தமிழகத் தொழிலமைச்சர் திரு.வேழவேந்தன் லண்டன் வருகை *********

### லண்டன் முரசுக்கு அமைச்சரின் பேட்டி

கேள்வி: தாங்கள் லண்டன் வந்ததின் நோக்கம் என்ன?

பதில்: ஜெனீவா தொழில் மாநாட்டிற்கு வந்த யான் பிரித்தானிய அரசு அழைத்ததின் பேரில் இங்கு வந்துள்ளேன்.

கேள்வி: தொழிலாளர் நலனுக்காக தமிழக அரசு புதிதாக என்ன செய்தது?

பதில்: யான் தொழில்மந்திரியாக பதவியேற்ற பின்னர் பல முதலாளிகள் தொழிலாளிகளிடமிருந்து அளவுக்கு மீறிய உழைப்பைப் பெற்று வருவதை தடுக்க முயற்சிகளெடுக்கப்பட்டு வருகின்றன.

கேள்வி: கள்ள வணிகத்தை தடுக்க என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன?

பதில்: உணவுப்பொருள் தட்டுப்பாடுகள் குறைந்து விட்டதால் கள்ள வாணிபம் பெருமளவில் இல்லை. முன்பெல்லாம் கள்ள வணிகத்தில் ஈடுபடுவோருக்கு அபராதம் மட்டும் விதிக்கப்பட்டு வந்தது. இப்போது கள்ள வணிகத்தில் சம்பந்தப்பட்ட சொத்துகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

கேள்வி: ஏழை மக்களுக்கு நல்வாழ்வளிக்க தீவிரமான பொருளாதார சட்டங்களை தமிழக அரசு தற்சமயம் கொண்டு வர முடியாவிடினும்,அத்தகைய சட்டங்களைக் கொண்டு வந்தால் மக்களின் ஆதரவைப் பெற முன்கூட்டியே தமிழக அரசு தீவிரப் பிரச்சாரம் செய்து பக்குவமான சூழ்நிலையை ஏன் ஏற்படுத்தக் கூடாது?

பதில்: எதையும் படிப்படியாக செய்யவேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. முக்கியமாக உணவு உற்பத்தியை பெருக்குவதால் ஏழைகளின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்கமுடியும் என்று கருதி உணவு உற்பத்தியை பெருக்குவதில் கவனம் செலுத்தினோம். சமீபத்தில் தமிழக உணவு அமைச்சர் இரண்டு இலட்சம் தொன் அரிசி உபரியாக இருப்பதாகக் குறிப்பிட்டார். எதிர்க் கட்சிகள் கொள்முதல் விலையை உயர்த்தும்படி கேட்டுக்கொண்டும் அரிசி விலையேற்றத்தை தடுக்கும் பொருட்டு கொள்முதல் விலையை உயர்த்தவில்லை. நில உச்சவரம்பை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கருக்கு குறைத்திருக்கிறோம்.

கேள்வி: அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏன் ஏற்று நடத்தக் கூடாது?

பதில்: அத்தகைய விநியோக நிறுவனங்களை ஏற்படுத்த அதிகப்படியான முதலீடு தேவைப்படும்

கேள்வி: தமிழக அரசு சமீபத்தில் பொருளாதாரத் துறையில் செய்தவைகளில் எதைப் பெரு வெற்றியாகக் கருதுகின்றது?

பதில்: எமக்குமுன் ஆட்சிபுரிந்த காங்கிரஸ் அரசு சேலத்தில் இரும்பாலை அமைக்க பெரும் பாடு பட்டும் அமைக்கமுடியவில்லை. தமிழக முதலமைச்சர் திரு.மு.கருணாநிதி சேலம் இரும்பாலை கிடைக்காவிடில் மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைக்கமாட்டோம் என எச்சரிக்கை விடுத்தார். அதன்பின் சேலத்தில் இரும்பாலை அமைப்பது உறுதியாயிற்று ஆரம்ப வேலைகள் தொடங்கி விட்டன. இது கழகத்தின் பெரும் வெற்றியாகும்.

கேள்வி: சட்டமன்ற உறுப்பினர்கள் தம் தொகுதிமக்களை குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையேனும் கண்டிப்பாக ஒரு பொது இடத்தில் சந்திக்கவேண்டும் என்ற ஒரு முறையை தி.மு.கழகம் தன் சட்டத்திட்டத்தில் கொண்டு வந்தாலென்ன?

பதில்: அருமையான யோசனை...யான் அவ்வாறே செய்து வருகின்றேன்.

கேள்வி: எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இதைக்கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்ற முறையை தி.மு.கழகம் வற்புறுத்துமா?

பதில்: அம்முறையை பின்பற்றினல் சிறப்பாகத்தான் இருக்கும்

கேள்வி: லண்டன் முரசு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இவ்வளவு தொல்லைகளுக்கிடையே இத்தகைய பத்திரிகையை நடத்துவது பிரம்மிக்கத்தக்க முயற்சி. எனது மனமார்ந்த பாராட்டுகள்.

************* லண்டன் முரசு வாசகர்களுக்கு "பொம்மை" சஞ்சிகை *************

லண்டன் முரசு வாசகர்கள் சிலரின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாட்டின் சிறந்த நவீன பொழுதுபோக்கு சஞ்சிகையான பொம்மை யை மேற்கு நாடுகளில் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

லண்டன் முரசின் முதல் ஐம்பது சந்தாதாரருக்கு யூன் மாத பொம்மை இதழ்களை அனுப்பியுள்ளோம். வாசகர்கள் பரிசீலனை செய்து விருப்பமாயின் ஏற்ற தொகையுடன் விண்ணப்பித்து தொடர்ந்து சலுகையுடன் பொம்மை சஞ்சிகையைப் பெறலாம்.

சந்தா விபரம் ( சந்தாதாரருக்கு சலுகை விலையில் )

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | 2/6 | அஞ்சல் செலவு உட்பட |
| ஆறு மாத சந்தா | I5/- | ,, ,, ,, |

லண்டன் முரசு வாசகர்களுக்கு பிரசுரம் அளிக்கவிருக்கும் தமிழ் சேவைகளில் இது ஒன்று என குறிப்பிட விரும்புகின்றோம்.

*********************

## சட்ட ஆய்வு

### விதி

இராசரத்தினமும் பாரியாரும் லண்டனில் ஒரு வீட்டுக்கு உடமைக்காரர். அவர்களின் வீடு வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கமைந்திருந்தது. அவர்களுக்கு ஒரு குழந்தையிருந்தது. அக்குழந்தையை பார்ப்பவர்களிடம் பார்க்கவிட்டு மாதம் 15 பவுன் கொடுத்து வந்தார்கள். இதற்கிடையில் இராசரத்தினத்தின் சகோதரியும் கணவனும் லண்டன் வந்திருந்தார்கள். அவர்களுக்குப் பிள்ளை யில்லாதபடியால் அவர்களுக்கு ஒரு அறையையும் ஒரு சிறு சமையலறையையும் கொடுத்திருந்தனர். வாடகை கொடுப்பதெனப்பேச்சில்லை. அவர்கள் இராசரத்தினத்தின் குழந்தையைப் பார்க்கவேண்டும். மின்சாரம், அடுப்பு வாயு வகையை அளவு கருவி மீற்றர் மூலம் காசு போட்டுப் பெறவேண்டியது. இவ்வாறு ஒரு ஆண்டு வரை நடந்தது.

பின்னர் இராசரத்தினத்தின் சகோதரிக்கும் மனைவிக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டு மீளாத்தொல்லையாகிவிட்டது. எனவே இராசரத்தினம் சகோதரி ராஜாம்பாளையும் கணவன் வைத்திலிங்கத்தையும் வீட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டார். அவர்கள் மறுக்கவே நீதிமன்றத்தில் வழக்கு வைத்தார்.

இவர்கள் வாடகை கொடுத்து இருக்கவில்லை; எனவே அவர்கள் தன் கட்சிக்காரரின் வாடகைக்காரரல்லவென இராசரத்தினத்தின் நியாயவாதி கூறினார். வாடகை பணமாகக் கொடுக்கத்தேவையில்லை— சேவையும் வாடகையாகக் கருதப்படுமென வைத்திலிங்கம் வாதாடினார். இதற்கு என்ன தீர்ப்புக்கிடைக்குமெனக் கூறுங்கள் பார்ப்போம்.

— தீர்ப்புக்கு 20ம் பக்கம் பார்க்கவும் — — பாரிஸ்டர்.

அன்புள்ள ஆசிரியருக்கு........

முரசு பத்திரிகையில் உள்ள தேனை அள்ளிப் பருகும் அவாவினால் உணவையும் உண்ண மறந்தேன். பாலில்தான் என்ன சுவையிருக்கு என்று ஒட்டக்கூத்தர் கூறியது போல, லண்டன் முரசிலுள்ள முத்துக்கள், தமிழில் இனிமையையும், புத்துணர்ச்சியையும் ஊட்டி மகிழ்விக்கின்றது. லண்டன் நகரிலுள்ள தமிழ் மக்களுக்கு, லண்டன் முரசை அளித்து, இனம் பிரிந்த இளங்கன்றாகத் தவிக்காமல், தமிழரின் நாமத்தைத் தழைத் தோங்க ஒன்று சேருங்கள் தமிழரே என ஓலம் இட்ட முரசு ஆசிரியர்களுக்கு என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

தங்கள் ஊக்கமும் முயற்சியும் உயற்சியைத் தரும் என்பது வெள்ளிடைமலை. அடுத்த இதழ் ஏன் நாளை வரக்கூடாது என்று ஆவலுடன் எதிர்நோக்குகின்றேன். தமிழால் வைதாரையும் வாழவைப்பான் என்ற நாமம் பொருந்திய இறைவன், அந்த இனிய தமிழைத் தழைத்தோங்க உதவும்படி அவன்தாள் பணிந்து நிற்கின்றேன்.

Portsmouth. இதழ் இரசித்த மலர்.

---

தேனினும் இனியத்தீந்தமிழ்த்தாங்கி மேற்றிசையிலிருந்து நாற்றிசையும் புறப்பட்டு எத்திசையும் தமிழணங்கின் புகழ் மணக்கத்தொண்டு செய்யும் தங்கள் முயற்சிக்குத் தமிழகத்தார் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர், தமிழ்மொழி உலக முக்கிய மொழிகளுள் ஒன்றாக உங்கள் போன்றோரின் உயரிய பணி உறுதுணையாக அமையும். போற்றுதற்குரிய இப்பணியில் ஏற்றமிகக்கான எங்கள் உதவி என்றும் தங்களுக்கு உண்டு. நாமனைவரும் ஒன்றே குலமென்று நன்றே செயல் பட எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள். வாழ்க லண்டன் முரசு, வாழிய நற்றமிழ்.

டி. செல்வராஜன், பொதுச் செயலாளர்,
கஸ்தூரிபா சங்கம், சென்னை

---

ஆஹா, எத்தனை அழகாகவும், அர்த்த புஷ்டியோடும் அமைந்துள்ளது அட்டைப்படம். உலகம் உருண்டை வடிவமானது என்பதனைக்காட்ட வட்டம். அதனுள் கீழை நாகரீகத்தின் ஆணி வேராம் கோபுர தரிசனத்துடன் மேலை நாகரீகத்தின் சின்னமாக சட்டங்களியற்றும் பார்லிமெண்டு கட்டிடம் காட்சியளிக்கும் அழகே அழகு. கீழை நாகரீகமும் மேலைநாகரீகமும் ஒன்றியிருக்க, சமயமும் சட்டமும் ஒருங்கே உலகை நல்வழிப்படுத்த கம்பீரமாக, வானையளாவி நிற்கும் அழகினை என்னென்பது. இந்தப் பத்திரிகை சீரும் சிறப்பும் பெற்று நற் பணிகள் பல புரிந்து உலகில் தமிழர்கள் எங்கு வாழினும் அவர்களது இல்லங்களிலெல்லாம் சென்று தமிழ் மணம் வீசும் என எண்ணி மகிழ்கின்றேன்.

வாழ்க அழகு தமிழ், வளர்க அதன் பெருமை.

வித்வான் எஸ். டி.
சென்னை.

---

மாஸ்கோவில் படித்துவரும், தமிழ் நாட்டைச் சேர்ந்தவளாகிய எனக்கு, உங்கள் பத்திரிகை உண்மையிலேயே வியப்பையளித்து. என் போன்று இங்கு படிக்கும் மாணவர்களுக்கு உங்கள் சஞ்சிகையொரு விருந்தாக அமைந்துள்ளது. தமிழின் பெருமையை மட்டும் இன்றி உலகச் செய்திகளையும், தெளிவாக, சுருக்கமாக எடுத்து எழுதி தெரியப்படுத்துவதற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். நன்றியும் கூறுகிறோம்.

பகிர்ந்துண்டு வாழும் பண்புடையவன் தமிழன், என்பதற்கோர் எடுத்துக்காட்டாக தமிழின் சுவையை நாம் மட்டும் சுவைத்தால் போதாது, அன்னியரும், மற்றவரும் சுவைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சஞ்சிகை தொடங்கியுள்ளதைக் கண்டு உள்ளம் பூரிக்கிறேன்.

உயர் தனிச் செம்மொழியாம் நம் தமிழை உலகுக்கு, ஊக்கமுடன் எடுத்தியம்பி மொழியின் பெருமையை எல்லோருக்கும் உணர்த்தி தமிழ்மொழி என்றென்றும் அழியா இடம்பெற தாங்கள் இலண்டன் மாநகரில் மேற்கொண்டுள்ள பணி மிகவும் பாராட்டக்கூடியதாகும்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று தமிழின் நிலை கண்டு அன்று பாடிச் சென்றார் நம் கவி பாரதியார். அவர்தம் கனவை நனவாக்கத் தொடங்கியுள்ள இலண்டன் வாழ் தமிழ் மக்களாகிய உங்கள் சஞ்சிகை வளர்ந்து, தமிழ்த் தாய்க்கான தங்கள் தொண்டும் வளர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

Moscow. செல்வி வி.சே.கமலா.

---

லண்டன் முரசு மேலும் வளர்ச்சியடைந்து ஒரு நாளாந்தப் பத்திரிக்கையாக வர வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

Middlesbrough சத்தியகுமார்.

---

நமது தமிழ் மக்கள் பல பல சாதிப்பிரிவோடு வாழ்வதால் நான் ஒரு தமிழன் என்று சொல்லக்கூட வெட்கமாக இருக்கின்றது. பல தமிழர் தம்மை தமிழர் என்று தலைதூக்கி சொல்ல வெட்கப்படுகிறார்கள்.

நான் கூட என் சொந்தக் கிராமத்தில் இருந்து வெளிப்பட்டவுடன் தமிழன் என்று சொல்லவில்லை. யாரும்— நீங்கள் என்ன சாதி ஐயா என்ன வர்ணகுலம் ஐயா என்றால் நான் என்ன பதில் சொல்வது நான்.........குலத்தை சேர்ந்தவன் என்று சொல்லிவிடுவது வழக்கம். .......................

நமது இந்தியா சுதந்திரம் அடைந்து எத்தனை வருடங்கள் ஆகியும் தீண்டாமை ஒழிப்பு ஏட்டில் தான் உண்டு. கிராமங்களில் இன்னும் தீண்டாமை ஒழியவில்லை. சாதிப் பிரிவினைகள் இன்னும் உண்டு. .................

சாதிப்பிரிவினைகள் அறவே ஒழிக்கப்படவேண்டும். அப்போது தான் தமிழன் தமிழனாக தலைதூக்கி செல்லமுடியும்.

லண்டன் முரசு வாழ்க தமிழ் மக்கள் ஒன்றுபட்டு உண்டு வாழ்க !
தமிழ்நாடு வாழ்க!

Fohrock, கே.ஐ.ஆர்.சாமி M.I.H.,
Co Dublin, EIRE.

ஆ — ர்: தங்களின் உணர்ச்சியுள்ள நீண்ட கடிதங்களும் கவிதைகளும் தமிழனின் தற்போதைய நிலைக்கு முக்கிய காரணமாக சாதி வியாதியை எடுத்துக்காட்டியுள்ளது. சாதிநோயை அறவே அகற்ற வழிவகைகள், ஆய்வுக்கருத்துக்கள் ஆகியவற்றை வாசகர்கள் எழுதி அனுப்பின் வரவேற்கப்படும்.

---

## லண்டனில் ஞானவள்ளல் பரஞ்சோதி மகான்

உலக சமாதான ஆலயத்தின் ஸ்தாபகரான ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள் அண்மையில் லண்டன் வந்துள்ளார். தமிழ்நாட்டைச்சேர்ந்த ஆதியில் இஸ்லாமியரான இவர் குண்டலினி யோக பயிற்சியில் தேர்ச்சியுள்ளவர் எனவும் மூச்சு மந்திரமில்லாது குண்டலினி செய்யக்கூடிய பயிற்சியளிப்பதாகவும் லண்டன் முரசுக்கு தெரிவித்துள்ளார்.

மகானை சந்திக்க விரும்புவோர் கீழ்க்காணும் தற்காலிக விலாசத்தில் அவருடன் தொடர்பு கொள்ளலாம். யூலை 15ந் திகதி வரை இங்கிலாந்தில் மகான் இருப்பார் என அறியவருகின்றோம்.

25 Hoop Lane
Golders Green, N.W.II.
01-458 3813.

# * * தமிழின் சிறப்பு * *

— கி.ஆ.பெ.விசுவநாதம் —

## 3. எளிமைச் சிறப்பு

தமிழ் மொழியானது எழுதவும், படிக்கவும், பேசவும் மிகவும் எளிதானது. இதனாலேயே தமிழ் இனிய தமிழ் என்பதோடு எளிய தமிழ் எனவும் கூறப் பெறுகிறது. இச்சிறப்பைப் பிற மொழிகளிற் காண இயலாது.

சீன, சப்பானிய மொழிகளின் எழுத்துக்களைப் போல மேலிருந்து கீழ்நோக்கி எழுதுகின்ற அல்லது உருது மொழி எழுத்துக்களைப் போல வலப்புறமிருந்து இடப்புறம் நோக்கி எழுதுகின்ற கடினமான முறை தமிழுக்கு இல்லை. இடப்புறம்ருந்து வலப்பக்கம் நோக்கி, எளிதாக எழுதலாம்.

சில மொழிகளின் எழுத்துக்கள் எழுதுகோலைப் பலமுறை எடுத்து மேலும், கீழும், பக்கவாட்டிலும் சில புள்ளிகளையும், குறிகளையும் இட்டு எழுதியதாக வேண்டும். தமிழ் எழுத்துக்களோ எனில் எழுத்தாணியையோ, எழுதுகோலையோ எடுக்காமலேயே தொடர்ந்து எளிதாக எழுதிக்கொண்டே செல்லலாம். சில மொழி எழுத்துக்கள் ஒரு எழுத்தை எழுதவே பல முறை எழுதுகோலை எடுத்தெடுத்துக் குறிகளிட்டு எழுதக்கூடியவை. இத்தொல்லை தமிழ் எழுத்துக்களுக்கு இல்லை.

தமிழ் எழுத்துக்களோ மொத்தம் 31 தான். அவை அ. ஆ. இ. ஈ. முதலிய உயிரெழுத்து 13ம் க். ங். ச். ஞ். முதலிய மெய்யெழுத்து 18ம் ஆகும். இந்த 31 எழுத்துக்களையும் தெரிந்துகொள்ளச் சில நாட்களே போதுமானவை. உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் சேர்ந்த கூட்டு எழுத்துக்கள் 216. க்.உ,கு ப்.அ,ப ம்.இ,மி என்பனவே இவை. இவற்றுள் எந்த எழுத்தை எழுதவேண்டுமானாலும் ஆங்கிலத்தில் Ka Ki Ku ஆறு எழுத்துக்களை எழுதியாக வேண்டும். " தடி" என எழுதவேண்டுமானால் தமிழில் இரண்டு எழுத்தே. ஆனால் ஆங்கிலத்தில் இதை Thadi என ஐந்து எழுத்துக்களில்தான் எழுத முடியும். ஆகவே தமிழ் எழுத மிகவும் எளிது.

தமிழ் மொழியானது எழுதமட்டுமல்ல, படிக்கவும் எளிது. தமிழில் ஒரு எழுத்துக்கு ஒரே ஒலியானதால் எவரும் எளிதாக எதையும் படிக்க முடிகிறது.

உயிரெழுத்து, மெய்யெழுத்து, கூட்டெழுத்து ஆகிய அனைத்தும் சேர்ந்து மொத்தம் 247 எழுத்துக்களே. இவைகளை அறியப் பெரியவர்களுக்குச் சில மாதங்களும் போதுமானது. பின் எடுத்த நூல்களையெல்லாம் படிக்கலாம். ஆகவே, தமிழ் படிக்கவும் எளிதானது.

தமிழ் மொழி பேசவும் எளிது. தமிழ்ச்சொற்களில் 100 சொற்களை எடுத்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு சொல்லாக ஒலித்துப்பாருங்கள். அவை ஒவ்வொன்றும் மேல் உதடு, கீழ் உதடு, மேற்பல், கீழ்ப்பல், நுனிநாக்கு, அடிநாக்கு, நடுநாக்கு, அண்ணுக்கு, உண்ணுக்குக் கொண்டே ஒலிப்பதாக இருக்கும். தொண்டைக்குக் கீழே வேலையேயிராது. பிற மொழிச் சொற்கள் சிலவற்றிற்கு 100க்கு 30 — 40 வீதமும், சிலவற்றிற்கு 60 — 70 வீதமம் தொண்டைக்குக் கீழேயிருந்து வலிந்து ஒலித்தாக வேண்டும். அவை பகுத் அச்சாவற் போன்றவை.

வடமொழிச் சொற்களில் பெரும்பான்மையானவை அடிவயிற்றின் துணையின்றி ஒலிக்க முடியாதவை. இவ்வாறு வலிந்து ஒலிப்பதால் நாவும் உலர்ந்து, தொண்டையும் வறண்டு, குடலும் காய்ந்து விடுகிறது. இவ்வுண்மையை வடமொழி அறிஞர்கள் கதாகாலட்சேபம் செய்யும் பொழுது பசும்பாலை அடிக்கடி குடித்துக் குடலை நனைத்துக்கொண்டே பேசுவதிலிருந்தும் தமிழறிஞர்கள் பச்சைத் தண்ணீரும் அருந்தாமல் பல மணி நேரம் பேசுவதிலிருந்தும் கூட நன்கறியலாம்.

ஆகவே, இதுகாறும் கூறியவற்றால், தமிழ்மொழியானது எழுதவும், யடிக்கவும், பேசவும்கூட மிகவும் எளிமையானது என நன்கறியலாம்.

— அடுத்த இதழில்..... தனிமைச் சிறப்பு.

---

## விஞ்ஞானப் பகுதி

— சோ. சபாபதிப்பிள்ளை.

### பம்பாயில் கருத்தடை வில்லை தயாரிப்பு

காட்டு வாழைப்பழத்திலிருந்து கருத்தடை வில்லையொன்றை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். பம்பாய் ஹொர்ப்கின் நிலைய டாக்டர்கள் ஆராய்ச்சி நடத்தி உருவாக்கியுள்ள இக்கருத்தடை வில்லைகள் நல்ல பலனளிப்பதாகவும் தற்சமயம் இவை இறுதியாக பரீட்சிக்கப்பட்டு வருவதாகவும் இந்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

### பனிக்கட்டித்திடரைப் பாலைவனத்துக்குக் கொணர்தல்

அவுஸ்திரேலியா, தென்மேற்காபிரிக்கா, தென்னமரிக்கா முதலிய இடங்களிலுள்ள பாலைவனங்களுக்கு பூமியின் தென் பீடத்திலுள்ள அன்ராட்டிக்கா விலுள்ள பிரமாண்டமான பனிக்கட்டிச் சரிவுகளிலிருந்து வரும் பனிக்கட்டித்திடர்கள் நன்மை பயக்கலாமாம்.

ஆர்ட்டிக், அன்ராட்டிக்காவிலுள்ள பனிக்கட்டிகளாலான சுத்த தண்ணீர் உலகிலுள்ள சுத்த தண்ணீரின் 80 சதவிகிதம் என்றும் அதாவது 60 வருட சாதாரண மழைத் தொகையாவிருக்கு மென்றும் அமெரிக்க பூகோள அளவையைச் சேர்ந்த டாக். காம்பெல் கூறுகின்றார்.

செவ்வக வடிவத்தையுடைய இப்பனிக்கட்டித்திடர்கள் இரண்டு சதுரமைல் பரப்பளவுடையன வாகும். 20 000 கோடி கலன் தண்ணீர் இவ்விதம் கொண்டு செல்ல 400 000 பவுன் செலவாகுமாம், அதாவது 1 கோடி கலன் தண்ணீர் 20 பவுன் செலவாகுமாம். கடற்றண்ணீரை சுத்த தண்ணீராக்க இதிலும் 10 மடங்கு செலவு ஆகும் என டாக். கம்பெல் கூறுகிறார்.

---

### கம்பியூட்டர் வாய்ப்புக்கள்

இங்கிலாந்தின் கம்பியூட்டர் கணக்காளர் — வல்லுநர் தட்டுப்பாட்டை நீக்க ஒரு புதிய நிறுவனம் ஆசிய நாடுகளிலிருந்து பட்டதாரிகளை சேர்த்து பயிற்சியளிக்க திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

சிங்கப்பூர், கல்கத்தா, கொழும்பு, ஹொங்காங் நகரங்களில் கம்பியூட்டர் பயிற்சி பெற்றோரை இங்கிலாந்திற்கு வரவழைத்து ஒரு வருடமோ அல்லது கூடிய காலமோ அங்கு வேலைபுரிய ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது இத்தாபனம்.

நவீன உலகின் முன்னேடியான கம்பியூட்டர் துறையில் தமிழ் மாணவ மாணவிகள் ஈடுபட்டு தேர்ச்சிபெற இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

முக்கிய மற்றும் நவீன துறைகளில் வாய்ப்புகள் வழிவகைகள் பற்றிய கூடிய விபரங்கள் லண்டன் முரசில் இடம்பெறும் என தெரிவிக்க விரும்புகிறோம்.

---

*************** மூன்றாவது உலக தமிழ் மாநாட்டு சிறப்பிதழ் ***************

ஆடி மாத லண்டன் முரசு இதழ் பாரிசில் நடைபெறவிருக்கும் மூன்றாவது உலக தமிழ் மாநாட்டை யொட்டி கூடிய பக்கங்களுடன் சிறப்பிதழாக பிரசுரிக்கப்படும்.

*************** ***************

---

லண்டன் விநோதம் பாரீர் — பொன் பாலகோபால்.

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி மாமாவைப்பாரு — அவர்
ஆம்பிளேயா பொம்பிளேயா என்றுன்னு கேளு.

இது சமீபத்தில் லண்டனில் நடந்தது. சிங்கப்பூரிலிருந்து வந்த லிம் என்ற சீன மாணவன் லண்டனில் உள்ள கல்லூரி ஒன்றில் படித்து வந்தான். அன்று சனிக்கிழமை. பிக்காடிலி சர்க்கஸில் (Piccadily Circus) உள்ள ஒரு இரவு கேளிக்கை அரங்கிற்கு (Night Club) சென்றான். வழக்கம் போல மங்கலான வெளிச்சத்தில் களியாட்டங்கள் நடைபெற்றன. அவனும் வழக்கம்போல் அமரும் இடத்தில் அமர்ந்து பானம் அருந்திக்கொண்டிருந்தான். இவன் அமர்ந்திருந்த மேஜைக்கு சற்று தூரத்தில் ஒரு வெள்ளைக்காரப் பெண்ணொருத்தி தனிமையாக அமர்ந்து பானம் அருந்திக்கொண்டிருந்தாள். லிம் அந்தப்பெண்ணைப்பார்த்து சைகை செய்தான். அவளும் சைகை செய்தாள். உடன் லிம் அவளருகில் சென்று அருகே உட்காரலாமா என்று கேட்டான். அவள் அதற்கு சிரித்தாள். லிம் அவளருகே அமர்ந்து மேற்கொண்டு இரண்டு கோப்பை மதுபானத்தை வாங்கி அவளருகே ஒன்றை வைத்து தான் ஒன்றை அருந்தினான். பேச்சு ஆரம்பித்தது இருவருக்கும். வேடிக்கைக் கதைகளை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். இருவரும் கட்டிப்பிடித்துக்கொண்டு ஆடத்தொடங்கிவிட்டார்கள். நேரம் பறந்தது. இரவு மணி பனிரெண்டு ஆயிற்று. கூட்டம் சற்றுக்கலைய ஆரம்பித்தது. அந்தப் பெண்ணை தன் இருப்பிடத்திற்கு வந்து தேனீர் அருந்திவிட்டுப் போகும்படி அழைத்தான். அந்தப்பெண்ணுக்கு விஷயம் புரிந்தது. அவளும் சரியென்றாள் சிரித்துக்கொண்டே. லிம் மிற்கு மட்டில்லா மகிழ்ச்சி. இன்று சரியான வேட்டையென்று எண்ணி ஒரு டாக்ஸியை அமர்த்தினான். டாக்ஸியை இருப்பிடத்தை நோக்கி செல்லும்படி டாக்ஸி சாரதிக்கு சொன்னான். பாதி தூரம் போன பிறகு திடீரென்று டாக்ஸி நின்றது. அதிலிருந்து லிம் துள்ளிக்குதித்து வெளியேவந்தான். டாக்ஸிக்காரனுக்கு பணத்தைக்கொடுத்து அனுப்பி விட்டான். அந்தப் பெண்ணும் டாக்ஸியிலேயே சென்று விட்டாள்.

நடந்தது என்ன என்று ஊகிக்கிறீர்கள் ? வேறொன்றுமில்லை அவன் அழைத்து வந்தது பெண்ணல்ல. பெண்ணுடையில் இருந்த ஆண். தமிழ்நாட்டில் ஒருமுறை ஒரு பழனியப்பன் பழனியம்மாள் ஆகவில்லையா, அதேகதைதான் இதுவும். ஆனால் இங்கு அந்த வெள்ளைக்காரன் முழுமையான பெண்ணாகும் முன்பே நடந்த விபரீதம் இது. பின்னர் விசாரித்துப்பார்த்தில் பெண்ணாக ஆசைப்படும் சில வெள்ளைக்காரர். யுஸ்டஜின் (Oestogen) மாத்திரைகளைப் பயன்படுத்தி பெண்மையை அடைய விரும்புகிறார்கள். அத்தகைய வெள்ளைக்காரருள் லிம் சந்தித்தவரும் ஒருவராவர்.

---

கேள்வி — பதில்

கேள்வி: இங்கிலாந்திலுள்ள பல தமிழர்கள் விரும்பி வாசிக்கக் கூடிய தமிழ்நாட்டின் சிறந்த பொழுதுபோக்கு சஞ்சிகையான பொம்மை யை பெற்றுத்தர தங்களால் முடியுமா ?

— எம். சிவராஜா, லண்டன். தெ. கி. 13.

பதில்: பொம்மை சஞ்சிகை இம்மாதம் முதல் தங்கள் போன்ற முரசு வாசகர்களின் விருப்பத்தை நிறைவேற்றுதற்காக விசேடமாக தருவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய விபரங்களை இன்னொரு பக்கத்தில் காணலாம்.

கேள்வி: மூன்றாவது உலக தமிழ் மகாநாட்டு முழு செய்திகளையும் முரசில் வெளியிடுவீர்களா ?

— எஸ். கே. சிங்கம், லண்டன். மே. 2.

பதில்: முடிந்தளவு மகாநாட்டு நடவடிக்கைகளை முரசில் பிரசுரிப்போம்.

---

## பேரறிஞர் அண்ணாவின் பெருஞ்சிறப்பு

— செ.இரத்தினம் —
மதுரைப் பல்கலைக்கழகம்.

தமிழகத்தை நல்வழியில் ஆக்க — நல்ல
தன்மைகளை வாழ்வினிலே சேர்க்க — அண்ணா
அமிழ்தான கொள்கைகளை
அருந்தமிழர்க் குணர்த்திடவே வந்தார் — நலம் தந்தார்.

மழை நீரைப் போலநீ மாறு — பரந்த
மனத்தோடு பிறரைநீ பாரு — என்ற
நிலபுகழ் அண்ணாவின்
நேர்வழிப் பாதையினைத் தேடு — நடை போடு.

பகைவரையும் உள்ளத்தால் நேசி — என்ற
பண்பான வார்த்தையினை யோசி — அன்பால்
வகைப்படுத்தி மாற்றுரை
வசமாக்க அவர்தந்த திட்டம் — வாழ்வுச் சட்டம்.

கண்ணியமாம் கட்டுப்பாடு கடமை — அண்ணன்
கற்றுத்தந்த பாடம் நமது உடமை — அறியும்
பொன்னாலும் பொருளாலும்
புகழ்சேர்க்க எண்ணுவது மடமை — சுத்தக் கொடுமை.

அருவியைப்போல் ஓடிவரும் பேச்சு — என்றும்
அருந்தமிழே அண்ணாவின் மூச்சு — நம்மை
உருவாக்கி உயர்வாக்கி
உயர்நோக்கிச் சென்றுவிட்ட அண்ணன் — தமிழ் மன்னன்.

எந்நாளும் இனிமையுடன் வாழ — என்றும்
இன்தமிழே நமையெல்லாம் ஆள — அறிஞர்
அண்ணாவின் வழியினிலே
அன்புடையீர் அனைவருமே நடப்போம் — வாழ்வைக் கடப்போம்.

### முன்னொரு குரல்

இந்நாட்டிலுள்ள பிரஜைகள் என்ன இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்கள் யாவர்க்குமிடையே ஒரு பேதமுமின்றி மனநோக்கும் வண்ணம் என் முகத்தைக் கருங்கல் மாதிரி இப்பொழுதும் எப்பொழுதும் வைத்துக் கொண்டேயிருக்கிறேன்.

ஈறெக் பவல் அக்ரோபர் 1964

---

### அச்சுக்குப் போகுமுன்....

இச் சஞ்சிகை அச்சேறும் நேரத்தில் பிரித்தானிய தேர்தல் இறுதி முடிவு வந்து கொண்டிருக்கிறது. பழமைதழுவும் கட்சி 31 அதிகப்படி இடங்களுடன் தொழிற் கட்சி அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டது. எனவே மாண்பு மிகு ஹீத் அவர்கள் பிரித்தானியாவின் புதிய பிரதமராகிறார். லண்டன் முரசு புதிய அரசாங்கத்தை வரவேற்கிறது.

# மாதர் பகுதி

இப் பகுதியில் தொடர்ச்சியாக மகளிர்க்குரிய விடயங்கள் பிரசுரிக்கப்படும். மாதர்க்குரிய விடயங்கள் யாவும் ஏற்றுத் தகுதியானவை பிரசுரிக்கப்படும். முக்கியமாக மேற்கு நாடுகளில் வதியும் மகளிர் இதில் பங்கு பற்றுவார்களென எதிர் பார்க்கிறோம்.

---

## பேரணி நாட்டியம்

— குயிலி — சென்னை.

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன் எட்டயாபுரம் சாத்தூர் தாலுக்காவைச் சேர்ந்த ஆடலரசி வெள்ளையம்மாவின் பேத்தி பொன்னம்மாள் முதன் முதலாக வாழைக் குருத்திலேயில் விளக்கெண்ணை தடவி அதன்மேல் சுடாத பச்சை மண் பானையைக் கவிழ்த்து நடனமாடினர். இதைப் பேரணி நாட்டியம் என்பர். தெய்வீக அருளாலேயே இவ்வித சாதனையைச் சாதிக்க முடியுமென்று அதைப் பார்த்த மக்கள் நம்பிக் கொண்டனர்.

அதனை அடுத்து இத்தனை காலமாக எந்தப் பெண்ணும் அந்த ஆட்டத்தை ஆட வில்லை. பொன்னம்மாளுக்குப் பிறகு அந்தக் கலை அதோகதியாகிவிட்டது. பின்னர் பரதம் நடேச ஐயரிடம் மிகவும் பாடுபட்டு இதனை விவாதம் மூலம் பூரணமாக உணர்ந்து கொண்ட மிருதங்க வித்துவான் மாங்குடி துரைராஜ ஐயர் தன் சிஷ்யைகளான காஞ்சனு, கௌரி, சகோ சகோதரியருக்கு இதனைக் கற்பித்துள்ளார். ஐந்து வருடம் கடுமையான பயிற்சிக்குப் பிறகு சுமார் ஐந்து ஆண்டுகளாகக் காஞ்சனுவும் கௌரியும் இந்த நாட்டியத்தை ஆடி வந்தார்கள். அற்புதமான இந்த நடனத்தை மிக ஒயிலாக இவர்கள் ஆடுவதைப் பார்க்கும் பொழுது உடல் சிலிர்க்கும். இந்தச் சகோதரிகளைவிட இந்நாட்டியத்தை ஆடுபவர்கள் யாருமேயில்லை.

---

## விவாகமான பெண்களுக்கு வீடு வாங்கச் சலுகை

ஒரு கட்டட சங்கம் விவாகமான தம்பதிகளுக்கு வீடு வாங்குவதற்கு ஈட்டுக்கடன் கொடுக்கும் வகையில் விசேட சலுகை அளிப்பதாக விளம்பரம் படுத்தியுள்ளது. மனைவியின் சம்பளத்தையும் முழுதாகக் கணக்கிலெடுத்துக் கடன் வழங்குமாம். தனியே கணவனின் சம்பளம் வீடுவாங்கத் தகுதி வாயாத குடும்பங்களுக்கு இது ஒரு சலுகையாகும். இதில் ஒரு நிபந்தனை யாதெனில் கணவனின் உத்தியோகம் உயரும் தகுதிக்கு சேர்ந்திருக்க வேண்டுமாம். இரண்டாவது நிபந்தனை கணவனும் மனைவியும் உழைத்துக் கொண்டிருக்கையில் திருப்பிக் கொடுக்கும் தொகை கூடியதாயிருக்கும். மனைவி வேலையினின்றும் விலகியவுடன் திருப்பிக் கொடுக்கும் தொகை கணவனின் சம்பளத்தைப் பொறுத்துக் குறைக்கப்படும். உதாரணமாக கிழமைக்கு 25பவுண் உழைக்கும் கணவனுக்குச் சாதாரணமாக 3000பவுண் கடன் மாத்திரம் கொடுத்து மாதம் 25பவுண் வசூலிக்கப்படும். இதே கணவனுக்கு கிழமைக்கு 17பவுண் உழைக்கும் மனைவியிருந்தால் அவர்களுக்கு 4000பவுண் கடன் கொடுத்துத் தொடக்கத்தில் மாதம் 42பவுண் வசூல் பண்ணப்படும். இதற்கேற்றபடி கொடுக்கும் வருடத் தொகை குறைவாக இருக்கும். மனைவி வேலையிழந்தவுடன் மாத வசூலிப்பு 25பவுண் ஆகி வருடத் தொகை அதிகரிக்கப்படும். இவ்வகைக் கட்டிடச் சங்கம் ஒன்றுதான் உள்ளது.

---

விளம்பரம். — குடியிருக்க வாடகைத் தட்டு (Flat) தேவை.

மலேசியத் தமிழ் தம்பதிகளுக்கு லண்டனில் வசிக்க, வசதியான வாடகைத்தட்டு தேவையாக வுள்ளது. தயவு செய்து பத்திரிகை முகவரிக்கு தகவல் அனுப்பவும்.

---

தீர்ப்பு பக்கம் 12 இன் தொடர்ச்சி

இவ்வகையான ஒரு பிரச்சினை ஆங்கில உயர் நீதி மனுமன்றத்திலெழுந்தது. அங்கு விவாதத்தின் பின் தீர்ப்பளித்த பிரபு நீதியரசர்களிலொருவரான பிரபு சாச்ஸ் கூறியதாவது: பிரதிவாதியின் நியாயவாதி கூறியது முறைதான்; அதாவது பொருட்சட்டப்படி சேவைகளும், வாடகை என்னும் பதத்தில் அடங்கியவைதான். ஆனால் வாடகைக் கட்டுப் பாட்டுச் சட்டத்தை பொறுத்தவரையில் நாங்கள் கவனமாக இருக்கவேண்டும். இங்கு குடியிருப்பு (tenancy) இருப்பதாக எடுத்துக் கொண்டாலும் இச் சூழ்நிலையில் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் அமையாது; ஏனெனில் இங்கு வாடகையைத் தொகைப் படுத்தவுமில்லை, வாடகையைத் தொகைப் படுத்தக் கூடிய ஒத்துக்கொண்ட முறை ஒன்றுமில்லை. பார்க்கப்போனால் வாடகை என்னும் எளிதான பதத்திற்கு சட்டரீதிப்படி இரு வித்தியாசமான கருத்துகள் உள்ளன. ஒன்று வாடகைக் கட்டுப்பாடு சம்பந்தமாகப் பார்க்கையில் பணத்தொகை. இரண்டாவது அப்படி சம்பந்தமற்ற சூழ்நிலையில் பணத்தொகை அல்லது சேவைகள் அல்லது இவை இரண்டும் சேர்ந்ததாகும். எனவே இங்கு வாதி பிரதிவாதியை வீட்டிலிருந்து வெளியேற்ற முடியும். இத் தீர்ப்பை அனுசரித்து இராசரத்தினம் தன் தங்கை ராஜாம்பாளையும் கணவனையும் வீட்டில் இருந்து வெளியேற்ற முடியும்.

---

## தமிழ் நூல்கள், வாழ்த்து அட்டைகள் வரவழைக்க ஏற்பாடுகள்.

மேற்கு நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ் வாழ்த்து அட்டைகளைப் பாவனையிற் கொண்டு வருவதற்கு சில முரசு வாசகர்கள் விரும்பியதன் பொருட்டும் தமிழ் நூல்கள் பெற விரும்புவதை முன்னிட்டும் தமிழ்நாட்டிலிருந்து தமிழ்நூல்கள், பொங்கல், புதுவருட தீபாவளி வாழ்த்து அட்டைகளை கொள்முதல் விலையில் பெற்றுத்தர லண்டன் முரசு பிரசுரத் தால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

---

## வேலை வாய்ப்புக்கள்

### இலங்கை

#### இலங்கைத் தேசிய பொறியியல் கூட்டுத்தாபனம்

அ. பொறியியலாளர் தாபனக் கூட்டங்கத்தவர், ஏ.எம்.ஐ.ஈ., மாதத்திற்கு ரூபா 1175 — 45 — 1400.

மின் பொறியியல் அல்லது எந்திர பொறியியலில் முற்றுன தொழில் நுட்பத் தகுதி உடையவர்க்கு மாதத்திற்கு ரூபா 1265 — 45 — 1400.

ஆ. பொறியியல் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகுதியுடன் 2 அல்லது 3 வருட அனுபவம். மாதத்திற்கு ரூபா 800 — 40 — 1120.

இ. பொறியியற் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகுதி, அனுபவம் அவசியமில்லை. மாதத்திற்கு ரூபா 700 — 40 — 860.

விண்ணப்பப் பத்திரங்கள், இலங்கைத் தூதரகத்தில் கிடைக்கப் பெறும்.

விண்ணப்பங்கள், காரியதரிசி, இலங்கைப் பொறியியல் கூட்டுத்தாபனம், இலங்கை. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

LONDON MURASU ENGLISH SUPPLEMENT

## THE THIRD INTERNATIONAL CONFERENCE SEMINAR OF TAMIL STUDIES

VENUE: College de France, Paris 5.

DATE: I5th to I8th July I970.

CONFERENCE TOPICS: I.CANKAM LITERATURE 2.MODERN LITERATURE IN TAMIL 3.EPIGRAPHY AND ARCHAELOGY 4.EXTERIOR RELATIONS OF TAMIL COUNTRY 5.TAMILS OVERSEAS 6.TAMIL AND SANSKRIT

---

## COACH TRIP TO THIRD WORLD TAMIL CONFERENCE

– Organised by Tamil Film & Cultural Society.

The Coach leaves London, for the World Tamil Conference in Paris, on the night of Wednesday the I5th of July I970. The Party would be accommodated in a Modern Youth Hostel in Paris. The Coach would be leaving Paris on the morning of Monday the 20th of Jtly reaching London the same night.

FARES(inclusive of Bed&Breakfast)

Adults £ I5.I0s
Children £ 7.I5s
(age 3-I4)

As there are only few seats available in the Coach those who wish to join the Coach Party could apply immediately along with a cheque for the full amount payable to Tamil Film & Cultural Society, c/o The President, 59 Gordon Road, Peckham, London.S.E.I5.

---

## TAMIL THROUGH ENGLISH

### LESSON II

We have so far studied the I2 vowels and the I8 Consonants. They are:

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

There are vowel Consonants which each Consonant forms with the twelve vowels respectively . We will now take all the vowel Consonants formed by the first Co onant with all the twelve vowels in order. They are as follows:-

( Cont'd )

| | |
|---|---|
| க formed with vowel அ<br>as Ka in Karma. | கா formed with vowel ஆ<br>as Ca in Card. |
| கி formed with vowel இ<br>as Ki in Kill. | கீ formed with vowel ஈ<br>as Kee in Keel. |
| கு formed with vowel உ<br>as Cu in Cushion. | கூ formed with vowel ஊ<br>as Coo in Coop. |
| கெ formed with vowel எ<br>as Ke in Kettle. | கே formed with vowel ஏ<br>as Kay in Kay. |
| கை formed with vowel ஐ<br>as Ki in Kite . | கொ formed with vowel ஓ<br>as Co in Copper. |
| கோ formed with vowel ஒ<br>as Co in Cold. | கௌ formed with vowel ஔ<br>as Cow in Cow. |

---

## VACANCIES

### CEYLON

### Vacancies for Engineering Appointments in State Engineering Corporation

A register of applicants is maintained by the corporation for cosideration for filling immediate and future vacancies.

a) Associate members of INSTITUTE OF ENGINEERS.
Rs II75-45-I400 P.M.
Full professional qualification in Electrical or Mechanical.
Rs I265-45-I400 P.M.

b) Engineering degree or equivalent and 2 or 3 years experience.
Rs 800-40-II20.

c) Engineering digree or equivalent without experience.
Rs 700-40-860

Applications must be made on prescribed forms obtainable from Ceylon High Commission addressed to the Secretay Engineering Corporation of Ceylon.

---

8 அஷென் கருரேவ் லண்டன் தெ.மே.19 ல் உள்ள லண்டன் முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது.

# EASTERN EXPRESS COMPANY LTD.

24, WARREN STREET, LONDON. W.1.

**Tel: 01-387 2933, 01-387 8750 Cables: EASTEXPRESS**

*BEST CHEAPEST AND EFFICIENT SERVICES AVAILABLE FOR:*

- Clearing of incoming Baggage & Delivery to any part of the United Kingdom.
- Collection of All Household effects, Automobiles, etc.
- Packing, Insurance, Dock Delivery & Worldwide Shipment.
- Electrical Goods at very Special Discount Rates.
- Used Motor Cars at Bargain Prices.

Printed by ORIENTAL PRINTERS LIMITED, 187 Edgware Road, W.2. 01-723 7756.